பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 24 வெள்ளிக்கிழமை 09.09.2022 கதிர் 306

இனி இது ரகசியம் அல்ல!

நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். ஜெனிவா பற்றிப் பேசினார்.

ஜெனிவாத் தொடர் திருவிழா தொடங்கிவிட்டது. நல்லூர் திரு விழாவுக்காக யாழ்ப்பாணம் போவது போன்று நம்மவர் பலர் திருவிழாவுக்காக 2



# வருகின்றார் சமந்தா பவர்

## ரணிலுடன் முக்கிய சந்திப்பு

அமெரிக்காவின் சர்வாதேச உதவித் திட்டம் அமைப்பின் தலைமை அதிகாரி சமந்தா பவர் நாளை சனிக்கிழமை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமாக அவர் இலங்கை வருகின்றார். 2

## டிசெம்பர் வரையில் மின்வெட்டு இல்லை

நீர்த்தேக்கங்கள் நிரம்பியுள்ள நிலையில் மின்சாரம் தயாரிக்கும் அளவுக்கு நிலக்கரி கிடைத்தால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை மின்வெட்டு தேவைப்படாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்னக்க, தற்போது மின்சாரத் தேவை குறைந்துள்ளதாகத் தெரிவித்தார். 11

## காங்கேசனில் மொபைல் ஊர்தியுடன் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பம்!

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் காங்கேசன்துறையிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை தொடர் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியினரால் இந்தப் போராட்டம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நாளை 10ஆம் திகதி காலை,காங்கேசன்துறை வீதி மாவிட்டபுரத்தில் போராட்டம் ஆரம்பமாகும். பங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வலியுறுத்தி கையெழுத்து போராட்டம் அங்கு இடம்பெறும். அதையொட்டி அங்கு 'மொபைல்' ஊர்தி ஒன்று செயற்படும். 11

## மகாராணி எலிசபெத் நேற்றுக் காலமானார்



பிரிட்டனின்நீண்டகாலமுடியாட்சியை நடத்தி வந்த மகாராணி இரண்டாம் எலிசபெத், 70 ஆண்டுகள் ஆளுகைக்குப் பிறகு, 96 வயதில் பால்மோரலில் காலமானார்.

வியாழக்கிழமை ராணியின் உடல்நிலைகவலைக்கிடமானதை அடுத்து, அவரது குடும்பத்தினர் ஸ்காட்லாந்தில் உள்ள பால்மோரல் எஸ்டேட்டில் கூடினர். 11

## நிவாரணம் வழங்குவதில் ஒழுங்கில்லை பாரபட்சம் என மனோ கணேசன் சீற்றம்



பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசு பொறிமுறை மீது எனக்கு நம்பிக்கை இல்லை. நிவாரணம் பெறுவோரை தெரிவு செய்வதில் பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரசாங்க அதிகாரிகள் அரசியல் நோக்கிலும், இனவாத நோக்கில் செயற்படுகின்றனர். உண்மையான நிர்க்கதியான மக்களுக்கு, இந்திய அரசு, தமிழக அரசு, உலக நாடுகள், ஐ.நா. அமைப்புகள் கொடையாக வழங்கும் நிவாரணங்கள் முறையாக கிடைப்பதில்லை. எனவே நிவாரண நன்கொடைகள் நேரடியாக நிர்க்கதியான மக்களை சென்று அடைவதை உறுதிப்படுத்த அவற்றை சிவில் 11



## யாழுக்குத் தீயணைப்பு வாகனம் வணிகர் கழக முன்முயற்சியால்!

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினால் யாழ் மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்படவுள்ள நிலையில் நேற்றையதினம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட தீயணைப்பு இயந்திரத்திற்கான அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபையின் 2

## இலங்கைக்குள் அரசியல் தீர்வு தமிழருக்குக் கிட்டவே கிட்டாது

### அடித்துக் கூறுகின்றார் சிவாஜிலிங்கம்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.09

இலங்கைக்குள் ஒரு போதும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடையாது. புதிய அரசமைப்பை உருவாக்கப்போவதாகக் கூறினாலும் ஒற்றையாட்சியைச் சுற்றிச் சுற்றித் தான் அது இருக்குமே ஒழிய, 11

## தம்மை விமர்சிப்பதற்கு சாணக்கியனுக்கு அருகதை கிடையாது என்கின்றார் நாமல்



எமது தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எமக்கு வாக்களித்த மக்களுக்கு மாத்திரம் இருக்கின்றதே தவிர, சந்தர்ப்பவாத அரசியல் நடத்தும் சாணக்கியன் போன்றவர்களுக்கு எந்தவோர் அருகதையும் கிடையாதென முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தான் சபையில் இல்லாத சமயத்தில் 2

## தமிழர்கள் மீதான பாலியல் வன்முறையாளர்களை தண்டிப்பதற்கு இலங்கைத் தரப்பு தவறிவிட்டது!

### அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட அமைப்பு அறிக்கை

PEARL

தமிழர்களிற்கு எதிரான மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை - குற்றவாளிகளை - தண்டிப்பதற்கு இலங்கை தவறிவிட்டது என அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பேர்ள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான அமைப்பு (பேர்ள்) தனது புதிய அறிக்கையில் இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை அரசாங்கம் எவ்வாறு தண்டிக்க தவறிவிட்டது என்பதை 2

## கொழும்பில் நேற்று மீண்டும் போராட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை அரசாங்கம் உடனடியாக விடுதலைசெய்யவேண்டுமென வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பிக்கு மாணவர்களினால் ஸ்ரீபோதிராஜா மாவத்தையில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று 11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவாவுக்குப் பெட்டி படுக்கை கட்டி விட்டனர் என்றார் அவர்.

அப்படிப்பயணிக்கப்புறப்பட்டவர்களின் பட்டியலையும் அவர் ஒப்புவித்தார். சிலரின்முயற்சிவிசாகிடைக்காமல்தடைப்பட்டமையையும் சொன்னார் அவர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் மட்டுமல்லர், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், இளைஞரணிப் பிரமுகர்கள் என்று அந்தப் பெயர்களின் பட்டியல் நீண்டது. அதுவும் கிழக்கில் மிக அதிகமானோரின் பெயர்களை அவர் குறிப்பிட்டார்

"இவர்கள் எல்லோரும் ஏன் சுவிஸ் போகின்றார்கள்? போய் என்னசெய்யப் போகின்றார்கள்?" - என்று கேட்டார் அவர்.

நான் பதிலுக்கு அவருக்கு ஒரு சினிமாக் கதை சொன்னேன்.

இந்தியாவில் பிரதமர் இந்திராவினால் அவசரகால நிலைமை - எமர்ஜென்சி - அறிவிக்கப்பட்ட போது இடம்பெற்ற அடக்கு முறைகளை கிண்டல் பாணியில் அம்பலப்படுத்தி, அச்சமயத்தில் நகைச்சுவை நடிகர் சோ ஒரு படம் எடுத்தார். படத்தின் பெயர் 'முகமது பின் துக்ளக்'. அந்தச் சமயத்தில் எமர்ஜென்சிக்கு கீழ் அந்தத் திரைப்படத்துக்கும் தடை விதிக்கப்பட்டது.

அந்தப் படத்தில் தம்மை துக்ளக் என்றும், எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாதுஷாவாக புதைகுழியில் புதைக்கப்பட்ட தாம் இப்போது உயிருடன் எழுந்து வந்திருக்கிறார் எனவும் கதை விடுவார் சோ. அவருடன் உதவியாளராகப் புதைகுழியிலிருந்து எழுந்து வருபவர் பதூதா.

அந்தச் சமயத்தில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு எம்.பி. ஆகும் துக்ளக் (இப்போது ரணில் போன மாதிரி) நாடாளுமன்றுக்கு தமதுகட்சியின்சார்பில்தனிஓர்எம்.பியாகச் செல்வார். அங்கு 350 எம்பிக்களைப் பேரம் பேசி அவர்களைத் தன்பக்கம் இழுத்துக் கொள்வார். அவர்கள் அனைவருக்கும் பிரதிப் பிரதமமந்திரி வழங்கி அதன் மூலம் தனது துக்ளக் அரசை அவர் அமைப்பார்.

துக்ளக் பிரதமர். அவர் கூட்டணியின் 350 எம்.பிக்களும் பிரதிப் பிரதமர்கள். அவர்களுக்கு எந்த இலாகாவும் இல்லாத பிரதிப் பிரதமர்கள் பதவி.

முதலாவது அமைச்சரவை கூட்டத்தை நடத்தி விட்டு வெளியே வரும் துக்ளக்கை பத்திரிகையாளர்கள் பேட்டி காண்பார்கள்.

"பதவியேற்றவுடன் நீங்கள் ஏன் அமெரிக்கா விஜயம் செய்கின்றீர்கள்?" - என்று புதிய பிரதமர் துக்ளக்கிடம் ஒரு செய்தியாளர் சீரியஸாகவே கேட்பார்.

"ஏன், நான் அமெரிக்கா பார்க்க கூடாதா?" - என்று நேரடியாகவே அப்பாவித்தனம் போன்று கிண்டலாகப் பதில் கேள்வி எழுப்புவார் துக்ளக் சோ.

இந்தக் கதையை என் நண்பருக்கு நான் கூறினேன்.

"நீங்கள் கூறும் இவ்வளவு பேரும் ஜெனிவா பார்க்க கூடாதா?" - என்று அவரிடம் முத்தாய்ப்பு வைத்தேன் நான்.

துக்ளக்கின் அமெரிக்கப் பயணம் போன்றது நம்மவர் பலரின் ஜெனிவாத் திருவிழாவை ஒட்டிய சுவிஸ் பயணமும்.

அவர்கள் சுவிஸ் பார்க்க வேண்டாமா? நன்றாக பார்க்கட்டுமே! அதற்கான திருவிழாதானே இது?நாங்கள் ஏன் அதைப் பற்றி அலட்டிக் கொள்வான்..?

போன புண்ணியத்துக்கு அவர்கள் ஜெனிவா பார்த்துவிட்டு வரலாம். அவ்வளவுதான்.

- மின்னல் -

## வருகின்றார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முக்கிய கலந்துரையாடலைமேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க உதவித் திட்டங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அரசியல் மற்றும் சிவில் பிரதிநிதிகளை கொழும்பில் அவர் சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

மேலும் ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்து இலங்கைக்கான விஜயம் குறித்தும் எதிர்கால அமெரிக்க உதவி திட்டங்கள் குறித்தும் அவர் விளக்கமளிக்க உள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 25 - 27 ஆம் திகதிகளில் இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க உதவி திட்டத்தின் தலைமை அதிகாரி சமந்தா பவர், அதைத் தொடர்ந்து இலங்கைக்கும் விஜயம் மேற்கொள்ள அவர் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் நாட்டில் காணப்பட்ட போராட்டங்கள் மற்றும் அரசியல் குழப்ப நிலை காரணமாக அவரது இலங்கைக்கான விஜயம் அப்போது கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

## தம்மை விமர்சிப்பதற்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னைப்பற்றி நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியனின் அவதூறாகப் பேசினார் என்று குற்றம் சுமத்தி அது தொடர்பில் கருத்துக் கூறுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, கொழும்பு இரவு விடுதிகளில் சாணக்கியன் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலங்களிலேயே நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம். அப்பொழுதெல்லாம் இரவு விடுதிகளுக்குள் முடங்கிக் கிடந்த தம்பி சாணக்கியன், இப்போது தன் சுயநல அரசியலுக்காக எம்மை விசர்சிக்கத் தொடங்கியிருக்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகள், மருத்துவமனைகள், வீட்டுத்திட்டங்கள், வேலைவாய்ப்புகள், விளையாட்டுக் கழகங்கள் எனப் பல உதவிகளைச் செய்திருக்கிறோம். இவற்றில் பலவற்றை அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேரில் பார்த்தே இருக்க மாட்டார். அப்படிப்பட்ட சுயநல அரசியல்வாதிக்கு எம்மைப்போன்ற மக்கள் சேவகர்களை விமர்சிக்கும் எந்தவோர் அருகதையும் கிடையவே கிடையாது.

பிள்ளையான் என்பவர் அன்றுதொடக்கம் இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சித் தாவலின்றி, எம்மோடுதொடர்ந்து பயணித்து வருகிறார். அவரது கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும் கூட. நில்சிமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சிதாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது.

நாங்கள் இப்பொழுதும் எமக்கு வாக்களித்த மக்களைப் பயமின்றிச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால், புலம்பெயர் தமிழர்களால் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டதையும், இலண்டன் கூட்டத்தை இரத்து செய்யும் நிலையேற்பட்டதையும் சாணக்கியன் மறந்து விடக் கூடாது எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## யாழுக்குத் தீயணைப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாணவர் சபை உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள், தீயணைப்பு படை பிரிவு உத்தியோர்கள் கலந்து கொண்டனர்

கடந்த 2020 ஆம் ஆண்டு யாழ் மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு படை வாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்தது. மாநகர சபையின் பாவனையில் இருந்த தீயணைப்பு இயந்திரமும் செயலிழந்த நிலையில் அரசாங்கத்தினால் எந்த உதவியும் வழங்கப்படாத விடத்து யாழ் வணிகர் கழகத்தின் முயற்சியால் கொடையாளி ஒருவரின் பங்களிப்பில் 2 கோடி ரூபா பெறுமதியான தீயணைப்பு வாகனம் இறக்குமதி செய்யப்பட்டு யாழ் மாநகர சபைக்கு எதிர்வரும் வாரம் கையளிக்கப்படவுள்ளது. அந்நிலையில் தீயணைப்புப் படை வாகன அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

## தமிழர்கள் மீதான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்ந்துள்ளது.

'விசாரணைகள் இல்லை - இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு இன்னல்கள் மட்டுமே' - என்ற தனது அறிக்கையில் பேர்ள் அமைப்பு பாலியல் வன்முறை உட்பட ஏனைய சர்வதேச குற்றங்கள் இடம்பெற்றன என்பதற்கான நம்பகதன்மை மிக்க ஆதாரங்கள் உள்ள போதிலும் குற்றவாளிகளிற்கு எதிராக இலங்கை சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளது.

பாலியல் பலாத்காரத்திலிருந்து உயிர் தப்பியவர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளானவர்களின் குடும்பத்தவர்கள் அரசியல்மயப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களிடமிருந்து அரிதாகவே நீதியை பெற்றுக்கொண்டுள்ளனர் என தெரிவித்துள்ள பேர்ள் அமைப்பு பாதிக்கப்பட்ட தமிழர்களை காட்டிலும் பாதுகாப்பு படையினரையே விசேடமாக பாதுகாக்க நினைக்கும் இலங்கையின் ஜனாதிபதிகளின் முன்மாதிரியை நீதிமன்றங்கள் பின்பற்றுகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

அதிகளவு இராணுவமயப்படுத்தப்பட்ட சூழலில் வாழும் தமிழ் யுவதிகள் பெண்கள் பாலியல் வன்முறை துஷ்பிரயோகம், துன்புறுத்தல் போன்ற ஆபத்தை அதிகம் எதிர்கொள்கின்றனர் எனவும் அமெரிக்காவைத் தளமாக கொண்ட அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பாலியல் வன்முறையின் பின்னர் உயிர் தப்பிய தமிழர்களும், பாலியல் வன்முறையின் பின்னர் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்களும் பழிவாங்குதல் குறித்த அச்சம் இலங்கையின் நீதித்துறையில் நீடிக்கும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல் ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர் என பேர்ளின் நிறைவேற்று இயக்குநர் அர்ச்சனா ரவீந்திரதேவ தெரிவித்துள்ளார்.

மோதல் தொடர்பான பாலியல் குற்றங்கள் மற்றும் பிற சர்வதேச குற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களிற்கும் உயிர் தப்பியவர்களிற்கும் சர்வதேசநீதி மாத்திரமே ஒரேயொரு பரிகாரமாக உள்ளது என மேலும் தெரிவித்துள்ள அவர் சர்வதேச சமூகம் மேலும் தடுமாறவோ அல்லது வழக்குகளை தாமதப்படுத்தவோ கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் யுத்தத்துடன் தொடர்புடைய பாலியல்வன்முறைகள் மற்றும்ஏனைய குற்றங்களைவிசாரணை செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லாததை பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.






# தாங்க முடியாத கடன் சுமையில் இலங்கை உட்படப் பல நாடுகள்!

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



இலங்கை உட்பட பல நாடுகளின் கடன் நிலைமை தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா தெரிவித்தார்.

நெதர்லாந்தில் இடம்பெற்ற ஆபிரிக்க உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அந்த நாடுகளுக்கு கடன் சுமை உருவாகி வருவதாகவும் தெரிவித்தார்.

60 சதவீத ஏழை நாடுகள் கடனை அடைக்க முடியாத சூழ்நிலையில் இருப்பதால், பொருளாதாரச் செயற்பாடுகளை சாதாரணமாகச் சிந்திக்க முடியாமல் உள்ளன என்றும் கூறினார்.

கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள், இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள, வலுவான வங்கி அமைப்பு மற்றும் நிலையான பொருளாதாரத்தின் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

# போதைப்பொருள் வைத்திருந்தால் இனி மரண தண்டனை விதிப்பாம்!

## சட்டங்களைக் கடுமையாக்கத் தீர்மானம்

5 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்தால் பிணை வழங்கப்படாது என்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்க வும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருளை எதிர்த்துப்போராடுவதற்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை வலுப்படுத்த பொது பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி போதைப்பொருள் கட்டளைச் சட்டத்தில் இது தொடர்பில் தேவையான திருத்தங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும் என பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

# தனிப்பட்ட வரப்பிரசாதங்களுக்கு நாடாளுமன்றை பயன்படுத்துபவர்களை மக்கள் நிராகரிப்பார்கள்!

## இத்தியாஸ் பாக்கீர் மாக்கார் சுட்டிக்காட்டு



தனிப்பட்ட வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கு நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தினால் மக்களின் நம்பிக்கை மேலும் சிதைந்துவிடும் என இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், அவ்வாறு நடந்தால் பிற்காலத்தில் மக்கள் மேற்படி உறுப்பினர்களை நிராகரிப்பார்கள் எனக் கூறினார்.

சத்தான சாப்பாடு என்பது தேங்காய்ச் சம்பலும் சோறும் அல்ல என்றும், இன்று அத்தகைய உணவைத் தயாரிக்க எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது என்றும் கேள்வியெழுப்பினார்.

உணவுப் பணவீக்கம் அதிகரித்துள்ளதாகவும் இந்த உயர்வுக்கு ஏற்ப ஊதியங்கள் அதிகரிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த தலைமுறையை நெருக்கடியில் இருந்து மீட்க பொறுப்புடன் செயற்படுவது அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொடூரச் சட்டத்தை எதிர்ப்போம்!

**தமிழ்த் தேசிய எழுச்சியைக் கொதிநிலையில் வைத்திருக்கும் ஒரு வெற்றிகர நடவடிக்கையாக கட்டவிழ்ந்தது பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி.**

**அதேபோன்று முழு இலங்கையையும் உள்ளடக்கியதான ஒரு நடவடிக்கை காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையான முயற்சியாக நாளை சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

**நாட்டில் கடந்த 45 வருடங்களாக மிகக் கொடூரமான சட்டமாக, மனிதநேயத்துக்கு மாறான விதிமுறையாக, நடைமுறைப்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான இயக்கமே நாளை முதல் முன்னெடுக்கப்படவிருக்கின்றது.**

**நாட்டின் ஒன்பது மாகாணங்களினதும், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி, ஒரு நாளுக்கு ஒரு மாவட்டம் என்ற அடிப்படையில் 25 நாள்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையொப்பங்களைப் பொதுமக்களிடமிருந்து சேர்க்கும் 'மொபைல்' ஊர்தி இயக்கம் ஒன்று நாளை காங்கேசன்துறையில் இருந்து ஆரம்பிக்கின்றது**

**தமிழரசு கட்சியின் இளைஞர் அணியும் சர்வஜன நீதிக்கான அமைப்புன் தமிழ் மாவட்டங்கள் எட்டிலும் இந்த இயக்கத்தின் ஏற்பாடுகளை முன்னெடுத்தாலும், தென்னிலங்கைப் பக்கத்தில் இந்த மொபைல் ஊர்தி இயக்கம் நகரும் போது ஜே.வி.பி., ஐக்கிய மக்கள் சக்தி போன்ற எதிரணிக் கட்சிகளும் அதில் இணைந்து முன்னெடுக்க ஏற்பாடுகள் நடக்கின்றன.**

**ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடத்திற்கு எதிராக தென்னிலங்கையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தற்போதைய 'ரணில் ராஜபக்ஷ' ஆட்சிப் பீடம் ஏவிவிட்டமையை அடுத்து அந்தச் சட்டத்துக்கு எதிரான உணர்வெழுச்சி தென்னிலங்கையில் கனன்று கொண்டிருக்கின்றது.**

**அதனால் இந்த ஊர்தி தென்னிலங்கை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடும் போது, அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களில் பெரும்பான்மையானோர் திரளுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**உண்மையில் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள்தான். தமிழர்களின் இரண்டு தலைமுறைகளின் வாழ்க்கையோடு விளையாடி அதை சீரழித்திருக்கின்றது இந்தச் சட்டம்.**

**ஆகவே அதற்கு எதிரான எதிர்வலையை – உணர்வெழுச்சியை – காட்டுவதில் தமிழர்களாகிய நாம்தான் முன்னிற்க வேண்டும். அந்த விடயத்தில் தெற்குக்கு நாம் சோடை போனால் இந்தச் சட்டம் குறித்து அது வித்தியாசமான வியாக்கியானங்களை பொதுவெளியில் தந்து விடும்.**

**ஆகவே இந்த மொபைல் ஊர்தி தமிழ் மாவட்டங்கள் எட்டில் எட்டு நாள்கள் பயணம் செய்யும்போது தமிழர்கள் திரண்டு எழுந்து தம் உணர்வலைகளைக் காட்ட வேண்டும்.**

**அது தமிழர் தரப்பில் சகலரையும் ஒன்றிணைத்து, வெற்றிகரமாக அரவணைத்து, முன்னெடுப்பதில்தான் தங்கி உள்ளது.**

**ஏற்பாட்டாளர்களுக்கு இந்த உண்மை நிலைமை சமர்ப்பணம்.**

## நாட்டில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தரத் தீர்வுகளை வழங்க முடியும்!

### சாணக்கியன் எம்.பி. நாடாளுமன்றில் உத்தரவாதம்



நாட்டில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தர தீர்வு வழங்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழித்து நாட்டு மக்களை மந்த போசணைக்கு கொண்டு சென்ற தரப்பினர் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தற்போது மேலவை இலங்கை கூட்டணி என்பதொன்றை உருவாக்கியுள்ளார்கள்.

லீ குவான் யூ, சிங்களே என குறிப்பிட்டவர்கள், வைத்தியர் சாபி தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்கள். நாட்டு மக்கள் இவர்களுக்கு ஏமாற கூடாது. பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்கள் மாத்திமல்ல இவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாட்டுக்கு வருகை தந்துள்ளமை ஒரு வழியில் நல்லது. இல்லாவிடின் மஹிந்த சுழங்கவை போல் கோட்டா சுழங்கவையும் ஆரம்பித்திருப்பார்கள். தற்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானத்துடன் இருக்க வேண்டும்.

மந்த போசனைக்குள்ளாகியுள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் உள்ள போது தீக்கிரையாகிய வீடுகளுக்கான நட்டஈட்டை அரசியல்வாதிகள் இரட்டிப்பாக்கியுள்ளார்கள், ஒரு வீட்டுக்குப் பதிலாக இரு வீடு, மதிப்பீட்டாளர் நெருக்கடிக்குள் என பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளன.

நாட்டில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தர தீர்வு வழங்க முடியும். தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளுக்கும், நீண்ட கால கோரிக்கைகளுக்கும் நிலையான தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டும்.

கடந்த நாள்களில் வெளிநாட்டுக்கு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு அந்நாடுகளின் அரசியல் தரப்பினர், இலங்கையர்களுடன் சந்திப்பில் ஈடுபட்டேன். முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்துள்ளன. புலம் பெயர் அமைப்புக்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதிகாரப் பகிர்வு அவசியமானது.

கடந்த நாள்களில் வெளிநாடுகளில் முக்கிய தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தேன். எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளில் அரசியலில் தொடர்புமில்லாமல் உள்ள இரண்டாம் தரப்பினருடன் ஒன்றிணைந்து இலங்கைக்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அதிகார பகிர்வு ஆகியவற்றுக்கு தீர்வு அவசியமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சாபகேடு. மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பாடசாலைகளும் இராணுவம் வசமுள்ளது. கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் சந்திரகாந்தன் கட்சி மாநாட்டுக்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை மட்டக்களப்புக்கு வரவேற்றுள்ளார்.

தனது சொந்த மாவட்டத்துக்கு செல்ல முடியாத நிலையில் நாமல் ராஜபக்ஷ உள்ளார். அவ்வாறிருக்கையில் நாமல் ராஜபக்ஷவை மேடைக்கேற்றி மட்டக்களப்பு மாவட்ட மக்களை தரம் குறைத்துள்ள சந்திரகாந்தனை சபையில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமலிருந்திருந்தால் அம்பாறை மாவட்டத்திற்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் கூடக் கிடைத்திருக்காது. கல்முனை பிரதேச செயலக பிரிவு குறித்து விரிவுப்படுத்தப்பட்ட பேச்சு முன்னெடுப்போம். – எனத் தெரிவித்துள்ளார்.

## பெரமுனவின் பெருமளவிலான உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர்

### வாசுதேவ கூறுகிறார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெருமளவிலான உறுப்பினர்கள் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இரண்டு குழுக்கள் உருவாக்கப்படும் என்றும் ஒரு குழு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான வலதுசாரிக் குழு என்றும் மற்றையது மக்கள் விடுதலை முன்னணி மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகிய இடதுசாரிக் குழு என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் குழுவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் எனவும் அதன் பின்னர் சஜித் பிரேமதாஸ தனித்து விடப்படுவார் அல்லது யதார்த்தத்தை எதிர்கொள்வார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


## மியன்மார் நாட்டிலிருந்து இலங்கைக்கு 1000 மெற்றிக் தொன் அரிசி நன்கொடை

17 கோடி இலங்கை ரூபா (சுமார் 4 லட்சத்து 63 ஆயிரத்து 215 அமெரிக்க டொலர்) மதிப்புடைய 1000 மெற்றிக் தொன் வெள்ளை அரிசி மியன்மார் அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

மியன்மாரின் யாங்கூனில் உள்ள ஆசிய உலக துறைமுக முனையத்தில் நடைபெற்ற விழாவில், மியன்மார் அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் யு.ஆங் நைன் ஓ, இலங்கையின் தூதுவர் ஜனக பண்டாரவிடம் இந்த அரிசியை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்த சவாலான சூழ்நிலையில் இலங்கைக்கு 1000 மெற்றிக் தொன் அரிசியை வழங்கி பெருந்தன்மை காட்டிய மியன்மார் அரசாங்கத்துக்கும் அதன் மக்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதாக ஜனக பண்டார தெரிவித்தார்.

இந்த அரிசி ஏற்றுமதி இம்மாதம் 4ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், இம்மாத இறுதியில் கொழும்புதுறைமுகத்தை வந்தடையவுள்ளது.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய இராணுவத்தின் உயர்நிலை அதிகாரி நேபாள இராணுவ அதிகாரிகளுடன் ஆராய்வு

இந்திய இராணுவத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியான ஜெனரல் மனோஜ் பாண்டே கடந்த திங்கட்கிழமை காத்மாண்டுவில் தனது சகபாடியான நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் பிரபு ராம் ர்மாவிடம் உயிரிழப்பை ஏற்படுத்தாத பல்வேறு இராணுவ உபகரணங்களை வழங்கினார்.

முன்னதாக, இந்திய இராணுவத் தளபதி நேபாள இராணுவத் தலைமை அதிகாரியை இராணுவ தலைமையகத்தில் சந்தித்தார்.

தற்போதுள்ள இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தவும், பரஸ்பர ஆர்வமுள்ள பகுதிகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவுமான பய்யணத்தில் இந்திய இராணுவத் தலைவர் நேபாளத்தில் இருக்கிறார்.

“ஜெனரல் மனோஜ் பாண்டே நான்கு நாள் பயணமாக நேபாளத்திற்கு சென்றார். இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேம்படுத்தவும், பரஸ்பர ஆர்வமுள்ள பகுதிகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்த பயணம் வாய்ப்பளிக்கும் என்று இந்திய இராணுவம் ட்வீட் செய்துள்ளது.

இந்திய இராணுவத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியாக நேபாளத்திற்கு ஜெனரல் பாண்டே மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும். இரு படைகளுக்கும் இடையே நட்புறவின் பாரம்பரியத்தைத் தொடரும் வகையில், நேபாள அதிபரின் அதிகாரப்பூர்வ இல்லமான சிடல் நிவாஸில் நடைபெறும் விழாவில், இந்திய இராணுவத் தளபதிக்கு நேபாளஈராணுவத்தின் கௌரவப் பட்டம் செப்டம்பர் 5, 2022 அன்று வழங்கப்பட்டது.








## புதிய பிரிட்டிஷ் பிரதமருக்கு இந்தியாப் பிரதமர் வாழ்த்து

இங்கிலாந்து பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிட்டன் வெளியுறவுத்துறை செயலாளர் லிஸ் ட்ரஸுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிவாழ்த்துதெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில், பிரதமர் மோடி, லிஸ் ட்ரஸ்ஸின் தலைமையின் கீழ், இந்தியா – இங்கிலாந்து விரிவான வியூகக் கூட்டாண்மை மேலும் பலப்படுத்தப்படும் என்றார்.

இங்கிலாந்தின் அடுத்த பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு வாழ்த்துகள். உங்கள் தலைமையின் கீழ், இந்தியா – இங்கிலாந்து விரிவான மூலோபாய கூட்டாண்மை மேலும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது. உங்களின் புதிய பங்கு மற்றும் பொறுப்புகளுக்கு வாழ்த்துக்கள் என்று பிரதமர் மோடி ட்வீட் செய்துள்ளார். .

கொன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராக லிஸ் ட்ரஸ் செவ்வாயன்று அறிவிக்கப்பட்டார். நாற்பத்தேழு வயதான லிஸ் ட்ரஸ் இங்கிலாந்தின் மூன்றாவது பெண் பிரதமராக பதவியேற்கிறார்.

அவர் அனைத்து கன்சர்வேடிவ் உறுப்பினர்களின் தபால் வாக்கு மூலம் தமது. போட்டியாளர் ரிஷி சுனக்கைத் தோற்கடித்தார். டிரஸ் 81,326 வாக்குகளும், சுனக் 60,399 வாக்குகளும் பெற்றனர்.

கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் பெருமைப்படுகிறேன். எங்கள் பெரிய நாட்டிற்கு தலைமை தாங்குவதற்கும், உரியவற்றை வழங்குவதற்கும் என் மீது நம்பிக்கை வைத்தமைக்கு நன்றி. இந்தக் கடினமான காலங்களில் நம் அனைவரையும் கொண்டு செல்லவும், நமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நான் தைரியமான நடவடிக்கை எடுப்பேன். ஐக்கிய இராச்சியத்தின் திறனை கட்டவிழ்த்து விடுங்கள் என்று டிரஸ் ட்விட்டரில் எழுதினார்.

கடந்த ஆண்டு மே மாதம் இந்தியா – இங்கிலாந்து இடையிலான மெய்நிகர் உச்சிமாநாட்டின் போது இரு நாடுகளினதும் எதிர்கால உறவுகளுக்கான சாலை வரைபடம் 2030 தொடங்கப்பட்டது. இந்த வரைபடமானது மக்களிடையே புத்துயிர் பெற்ற மற்றும் ஆற்றல்மிக்க இணைப்புகள், மீண்டும் ஆற்றல் பெற்ற வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு இந்தியாவிற்கு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சராக விஜயம் செய்த போது, ட்ரஸ் மற்றும் வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஆகியோர், சாலை வரைபடம் 2030 தொடர்பாக இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்தமையோடு, வர்த்தகம் மற்றும் முதலீடுகள், பாதுகாப்பு மற்றும் இடம்பெயர்வு ஆகிய முன்னுரிமைப் பகுதிகளில் முடிவுகளை வழங்குவதற்கான முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்த ஒப்புக்கொண்டனர்.

இந்தியா – இங்கிலாந்து சுதந்திர வர்த்தக உடன்பாடு தொடர்பான பேச்சுகள் ஜனவரி 2022 இல் தொடங்கப்பட்டதிலிருந்து இரண்டு பயனுள்ள சுற்றுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றத்தை இரு தரப்பினரும் பாராட்டினர்.

## தமிழகத்தின் 3 ஐம்பொன் சிலைகள் அமெரிக்க அருங்காட்சியகங்களில்!

கும்பகோணம் அருகே சவுந்தரராஜ பெருமாள் கோவிலுக்கு சொந்தமான, மூன்று சிலைகள் அமெரிக்காவில், அருங்காட்சியகங்களில் இருக்கின்றமையை சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே சுந்தரபெருமாள்கோவில் கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் சவுந்தரராஜ பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் இருந்த காளிங்கனார்த்தன கிருஷ்ணன், விஷ்ணு, ஸ்ரீதேவி ஆகிய 3 பழங்கால சிலைகள் பல ஆண்டுகளுக்கு முன்பு மர்ம நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

பின்னர் கொள்ளையடிக்கப்பட்ட அந்த 3 சிலைகளையும் வெளிநாட்டுக்கு கடத்தி விற்றுள்ளனர். இது குறித்து கடந்த 2020ம் ஆண்டு கோவில் செயல் அலுவலர் ராஜா என்பவர் சென்னை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு சி.ஐ.டி.,யில் புகார் செய்தார். அந்த புகாரில் கோவிலில் இருந்து திருடப்பட்ட சிலைகளை கண்டு பிடித்து மீட்டு கொண்டு வர வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து இந்த வழக்கை விசாரிக்க டி.எஸ்.பி. சந்திரசேகரன் நியமிக்கப்பட்டார். அவர் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார். அதில் கடந்த 60 முதல் 65 ஆண்டுகளுக்கு முன்பு சில மர்ம நபர்கள் 3 சிலைகளையும் கடத்தி அதற்குப் பதில் போலி சிலையை வைத்தமை தெரியவந்தது. இதையடுத்து புதுச்சேரி இந்தோ – பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட்டில் பெறப்பட்ட புகைப்படத்துடன் தற்போதுள்ள போலி மாடலை ஒப்பிட்டு பார்த்ததில் தற்போதுள்ள 3 சிலைகளும் போலி என்பதும், உண்மையான சிலைகள் வெளிநாட்டுக்கு கடத்தப்பட்டதும் நிரூபணமானது. இதனை தொடர்ந்து உலகெங்கிலும் உள்ள பல்வேறு இணைய தளங்களில் சிலை பற்றிய தகவலை திரட்ட தொடங்கினர்.

நீண்ட தேடலுக்கு பிறகு அமெரிக்காவில் உள்ள பல அருங்காட்சியகங்களில் கொள்ளை போன 3 சிலைகளும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது அமெரிக்கா சான்பிரான்சிஸ்கோ, ஆசிய கலை அருங்காட்சியகத்தில் சுமார் 26 அங்குலம் கொண்ட கலிங்கனார்த்தன கிருஷ்ணன் சிலையும், அமெரிக்கா டெக்சாஸ் கிம்பெல் கலை அருங்காட்சியகத்தில் 33.5 அங்குலம் கொண்ட விஷ்ணு சிலையும், அமெரிக்கா புளோரிடா ஹில்ஸ் ஏல மையத்தில் ஸ்ரீதேவி சிலையும் இருப்பதை சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் கண்டுபிடித்தனர். இதையடுத்து அமெரிக்காவில் இருந்து அந்த 3 சிலைகளையும் மீட்டு கொண்டு வர சிலை கடத்தல் தடுப்பு பிரிவு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 117**

விடுதலைப் புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடைக்கால நிர்வாக அரசு அமைந்த பின்னர் மிகுதியான ஆயுதங்களை ஒப்படைக்கத் தாங்கள் தயாராக இருக்கிறார்கள் எனப் புலிகள் தரப்பில் அறிவிப்பு இருந்தாலும், நடைபெற்றுக் கொண்டிருந்த பிரசாரங்கள், ஒப்பந்தத்திற்கு ஆதரவின்மையையும் அவநம்பிக்கையையுமே வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

ஆயுதங்களைக் கையளிப்பது என்ற இந்த அறிவிப்பு வந்தாலும், தமிழ்ப் பிரதேசங்களில்பொலிதீனுக்கும்கிறீஸுக்கும் பெருத்த தட்டுப்பாடு ஏற்பட்டது. விசாரணைகளில் இவற்றை விடுதலைப் புலிகள் பெருமளவில் கொள்முதல் செய்து, ஆயுதங்களைப் பதுக்குவதற்காக பயன்படுத்துகிறார்கள் என்ற செய்திகள் கசிந்தன.

அவற்றை நடத்திக் கொண்டு, இந்திய அரசாங்கம் வாக்களித்தவற்றை நிறைவேற்ற வேண்டுமென மறுபுறத்தில் திலீபன் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். உண்ணாவிரதமும் தனது இனத்துக்காகத் தன்னுயிரைத் தண்ணீர் கூட அருந்தாது ஆகுதியாகத் தந்தான் என்ற வரலாறும் தமிழினத்திற்கு பெருமை சேர்ப்பன. அவனது உடல் வலிமை குன்றவும், அவனது இனத்திற்கான தியாக உணர்வுகள் தமிழ் மக்களது உணர்ச்சிகளைத் தூண்டின. இந்த உணர்ச்சிகள் இந்திய அதிகாரங்களின் இயலாத்தன்மைகளுக்கு எதிராகத் தூபம் போடப் பயன்படுத்தப்பட்டன. இப்படியான தூண்டுதல்களுக்குத்தானா இவை நடத்தப்படுகின்றன என்ற சந்தேகங்களும் இந்தியப் பகுதிகளுக்கு வலுவாக இருந்தன.

ஜே.ஆர். தனக்குக் கிடைத்த உளவுத் தகவல்களின் அடிப்படைகளில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க போவதில்லை, ஆகவே, அவர்களை உள்ளடக்கி இடைக்கால நிர்வாகத்தை அமைக்கத் தான் தயார் இல்லை என்ற திமிரைக் காட்டினார்.



அவருக்கும் அவரது கட்சிக்குள்ளேயும், எதிர்த்தரப்பிடமிருந்தும் பலமான எதிர்ப்புகள், அழுத்தங்கள் பெறப்பட்ட போது, ஒப்பந்தத்தில் அதிகாரப்பரவல் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், ஸ்ரீலங்காவின் அரசியல் சாசனத்தின் படி தனது நிறைவேற்று அதிகாரத்தில் அதனை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் மூலமே அதை நிறைவேற்றுவேன், அதுதான் விளங்கிக் கொள்ளப்பட்ட அதிகார பரவல், அப்படி இல்லாவிட் டால் அதிகாரப் பரவலை மக்கள் தேர்தலில் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நரித்தனங்களை வெளியிட்டார்.



Mr J.N. Dixit with the LTTE Supremo Pirabakaran and Maj. Gen. Harkirat Singh, GOC IPKF after the conference on 26 September 1987.



இந்தியாவோ தாங்கள் இந்த நிலைப்பாடுகளுடன் மல்லு கட்டுகிறோம், ஆனால் விரைவில் இவை தீர்க்கப்படும் என்று கூறிக் கொண்டிருந்தது.

விடுதலை புலிகள் மட்டுமல்லர், எல்லாத் தமிழ் தரப்புக்களுமே இவை விரைவில் நடைபெற வேண்டும், ஜே.ஆரை நம்புவதற்கு இல்லை என்று அறிவித்தல்கள் தந்து கொண்டு இருந்தார்கள்.

இவற்றால் திலீபனது உண்ணாவிரதப் போராட்டமும் இந்தியாவின் இயலாமையை வெளிப்படுத்துவதற்காகவே நடந்து கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகளோடு நிலைமைகளைப் பற்றி பேசுவதற்காக இந்திய தூதுவர் டிக்ஸிற் யாழ்ப்பாணத்துக்கு வந்த போது, திலீபனின் உடல் நிலை படு மோசமடைந்து அவன் மரணத்தின் விளிம்பில் இருந்தான். டிக்ஸிற்றைச் சந்தித்த பிரபாகரனும் மதியுரைஞர் பாலசிங்கமும் அவரைத் திலீபனை வந்து சந்தித்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கோரும்படி வற்புறுத்தினர். அப்படி இந்தியத் தூதுவர் வந்து கேட்டால் திலீபன் உண்ணாவிரதத்தை கைவிட்டிருப்பான், அவனது மரணம் நடந்திருக்காது, நிலைமைகள் சுமுகமாகத் தொடர வழிகள் இருந்தன என்பது மதியுரைஞரின் வாதம்.

ஆனால் தூதுவரோ தனக்குத் தரப்பட்ட உளவுத்துறை புலன்விசாரணை அறிக்கைகளின் படி விடுதலை புலிகள் இந்தியாவின் ஒப்பந்தத்தின் எதிர்ப்புப் பிரச்சாரமாகவே இந்தியாவின் இயலாத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு என இந்தச் சூழ்நிலையைக் கட்டி எழுப்புகிறார்கள், அவர் அங்கு சென்று அப்படியான கோரிக்கையை வைத்தாலும், திலீபன் அதனை நிராகரிப்பார், இந்தியத் தூதுவர் நேரில் வந்து கேட்டும் இந்தியாவின் இயலாத் தன்மையைத் திலீபன் அறிந்திருந்தமையால் ஏற்றுக்கொள்ளாமல் தன் உயிரை ஆகுதியாக்கினான் என்றே பிரச்சாரங்கள் நடக்கும், ஆதலால் தான் அங்கு போய் இந்தியாவுக்கு தலைகுனிவு ஒன்றைத் தரவிரும்பவில்லை என மறுத்துவிட்டார். திலீபனும் தன் உயிரை மாய்த்து மறைந்தான். உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் பொங்கின. சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும் நிலைமைகளை அப்போது ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

### ஏகோபித்த தலைமைப் பார்வைகள்

திலீபனின் மரணம் பலமான உணர்ச்சி அலைகளை நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் ஏற்படுத்தி, இது இந்தியாவின் இயலாமையினாலும் ஜே.ஆரின் திட்டங்களைக் கட்டுப்படுத்த விரும்பாததாலும் எழுந்தவை என்ற பிரச்சாரங்கள் பலமாக நடத்தப்பட்டன.

ஆனாலும் பொலித்தீன்களில் கிறீஸ் பூசி சுற்றப்பட்ட ஆயுதங்கள் பதுக்கப்படுவதற்காக விடுதலைப் புலிகளால் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்தன. அவற்றை இந்திய, ஸ்ரீலங்கா உளவுத்துறைகள் மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தன. ஆனாலும் விடுதலைப் புலிகளுக்குப் பாரிய சந்தேகங்களை வளர்த்தது – அவர்களுக்கு அளப்பரிய சஞ்சலங்களை ஏற்படுத்தியது – தமிழ் நாட்டில் இருந்து திரும்பி வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட்,ரெலோவின் போராளிகள்தான். அவர்கள் றோவினால் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதங்களுடன் வந்திறங்கியமை தங்களை முடிக்கத்தான் என விடுதலைப் புலிகள் திடமாக நம்பினர். இதனால் கிழக்கு மற்றும் மன்னார் பகுதிகளில் இறங்கியவர்களில் பலர் புலிகளால் கொல்லப்பட்டார்கள். உண்மையில் அவர்கள் எல்லைப் பகுதிகளைக் கவனிப்பதற்காகவே வகுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் வந்தவர்கள் என்பதை விடுதலை புலிகள் நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை. இவர்கள் றோவினால் பயிற்சிகளுக்கு உள்வாங்கப்பட்டவர்கள், தங்களது பாதுகாப்புகளுக்குப் பாதிப்பாக இவர்கள் வளருவார்கள் எனவும் அவர்கள் நம்பினர்.

அரசியல் சித்தாந்தங்களில் தாங்கள் ஏகோபித்த தலைவர்கள் என்பதை விட்டுக் கொடுத்து, பொதுநோக்கத்தில் மற்ற எவரையும் அரவணைத்து முன் செல்ல அப்பொழுதும் புலிகள் தயாராகவில்லை. தாங்கள் ஏற்றுக்கொள்ளாத எந்த இயக்கத்தின் உறுப்பினரையும் அழிப்பது நியாயமானது என்றும், இலட்சியத்திற்கான தேவை அது என்றும் விதைக்கப்பட்டு வளர்ந்திருந்தது அந்த அமைப்பு. இதில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து வந்த பத்திரிகைகள், ஊடகப் பதிவுகள் என்ப னவும் காத்திரமான பங்கு வகித்தன. இப்படியான வளர்ச்சிகளுக்கு உதவின. அவற்றை நாளை தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்...)

# உருப்படியான வேலை



என்.சத்தியமூர்த்தி

வருடாந்தம், பொங்கலும் தீபாவளியும் வருகிறதோ இல்லையோ. கடந்த பத்தாண்டுகளாக, இலங்கைத் தமிழரைப் பொறுத்த வரை, ஆண்டுக்கு இரு முறையான ஜெனிவா கோலாகலம் நிச்சயமாக வந்தே விடுகிறது. தற்போது, ஐ.நா. மனித உரிமை குழுவில் நடைபெறவிருக்கும் இந்த ஆண்டிற்கான இரண்டாவது மனித உரிமை நகர்வானது, அடுத்த மார்ச் மாத ரவுண்ட் வரை, தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் ஊடகங்களுக்கும் பேசு பொருளாக இருக்கும். அது தவிர்த்து அதனால் பலன் எதுவும் இல்லை.

என்ன, அடுத்த இரண்டு திங்களுக்கு, சில – பல உள்நாட்டு தமிழ் தலைவர்கள் ஜெனிவாவிற்கு காவடி எடுப்பார்கள். இது வழமையாக நிகழும் ஒன்றே. அதில், ஒன்றோ இரண்டோ பேர் விட்டு போகலாம். அவர்கள் இடத்தை வேறு யாராவது நிரப்பலாம். புலம்பெயாந்தோரும் தங்களில் யார் பெரியவர் என்று காட்டிக் கொள்ள ஜெனிவாவில் ஆள்களைத் திரட்டலாம். ஆனால், அவர்களில் ஒரு புது முகமோ, அல்லது அவர்களிடமிருந்து ஒரு புது கருத்தோ, யுக்தியோ பெயராது என்பது நிச்சயம்.

இன்னும் சொல்லப் போனால், அறகலயா போராட்டத்தில் பிரிந்து நின்ற தென்னிலங்கை அணிகளை எல்லாம், இந்த முறை மீண்டும் சேர்த்து வைப்பது, ஜெனிவாத் திருவிழாவாகத்தான் இருக்கும். தென்னிலங்கையைப் பழிப்பதாலும், அல்லது குறிப்பிட்ட சிலருக்கு எதிராக எப்போதாவது நடவடிக்கை பாயும் என்று பூச்சாண்டி காட்டுவதாலும, தமிழர் தரப்பிற்கு ஆகப்போவது என்ன?

இல்லை, உலக நாடுகள் எல்லாம் ஒன்று திரண்டு, தமிழர்களுக்கு தனி நாடு கொடுப்பதாகவே ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். அது குரங்கு கை பூ மாலையாக தானே முடியும். கடந்த 2013 – 2018 கால கட்டத்தில், வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சியின் அழகைத்தான் பார்த்தோமே. அன்றைக்கு இன்று, தமிழர் தலைமை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி உள்ளது. அடுத்த தலைமுறைக்கான தமிழர் தலைமை இங்கே இல்லை. அல்லது, கண்ணில் இன்னமும் படவில்லை.

இவ்வாறு கூறிக்கொள்வதால், இல்லை என்று அறிந்து கொண்டே அதனை ஏற்றுக் கொள்ளாமல், சிறிது ஆசுவாசம் அடையலாம். அதாவது, சில காலத்திற்கு பிறகு, ‘மீண்டும் பிழை விட்டோம்’ என்ற பழைய பல்லவியை பாடுவதற்கு, இப்போதே தயாராகி கொள்ளலாம்.

## காய்ந்த வயிறில் கல்வி

அந்த வகையில், உலக நாடுகளிடம் பிச்சை எடுத்தாவது, பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்குவேன் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தா கடந்த வாரம் அறிவித்திருந்தனை,ஜெனிவாகூத்திற்குஎவ்வளவோ, சிறந்தது. நாடு உணவிற்காக பிச்சை எடுக்க வேண்டும் என்ற நிலைமை தோன்றியிருப்பது உண்மையே. என்றாலும், எதிர்கால சமுதாயத்திற்காக, பள்ளி மாணவர்கள் காய்ந்த வயிறுடன் கல்வி கற்க முடியாது என்ற காரணத்திற்காக, அவர்களுக்கு இலவச மதிய உணவு திட்டத்தை மீண்டும் முழுமையாக அமல்படுத்தப் போவதாக அமைச்சர் அறிவித்துள்ளமை, வரவேற்கத்தக்கது.

பள்ளிக் குழந்தைகளின் பசி மற்றும் அனைத்துக் குழந்தைகளின் போஷாக்கின்மை குறித்து நாடாளுமன்றம் விவாதித்த போது, இது குறித்த யுனிசெவ் அறிக்கையை அரசு நிராகரித்துள்ளது. விவாதத்தில் பங்குபற்றிய கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இனப்போர் காலம் துவங்கி இன்று வரை தமிழர் பகுதிகளில் போாக்கின்மையால் குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்று விவரமாக எடுத்துரைத்தார். அந்த பிரச்சினையைத் தென்னிலங்கை தற்போதைய பொருளாதாரப் பிரச்சினை துவங்கிய பின்னரே அனுபவித்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.



அந்த வகையில், அமைச்சரின் அறிவித்தல், தமிழர் பகுதிகளுக்கும் பொருந்தும் என்றே கருதவேண்டும். எனவே, இதனைத் தமிழர் அரசியல் தலைமைகளும் அதிலும் முக்கியமாக புலம்பெயர்ந்தோர் அமைப்புகளும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். குறிப்பாக, முன்னர் தடைசெய்யபட்பட்டு, இப்போது அரசின் அங்கீகாரம் மீளப்பெற்ற அமைப்புகள் அமைச்சரின் இந்த அறிவிப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவர்கள், வேண்டுமென்றால், இவ்வாறான ஒரு வாய்ப்பை அரசின் உண்மை தன்மைக்கான ஒரு சோதனையாகக் கூட வைத்தக் கொள்ளலாம். எதுவென்றாலும், தமிழர்களின் அரசியல் உரிமைகள் என்ற பாதையில் பயணித்துக் கொண்டே, தங்கள் மக்களின் அன்றாட தேவைக்கான உதவிகளை பகிரங்கமாகவே செய்ய அவர்கள் முன் வர வேண்டும். அதற்கு இது போன்ற வாய்ப்புகள் முதல் படியாக அமையலாம்.

## சமுதாய மருத்துவம்

தமிழர்களை பொறுத்தவரையில், இனப்பிரச்சினையின் அடித்தளமே, கல்வி மற்றும் அதை ஒட்டிய வேலை வாய்ப்பு சார்ந்தே துவங்கியது. பண்டாரநாயக்காவின் சிங்களம் மட்டும் திட்டத்தை தமிழர்கள் எதிர்த்ததும் இதனால்தான். ஆனால், முப்பது ஆண்டு இனப்போரில் தமிழர்கள் இழந்தவற்றில், உயிர் மற்றும் உடமைகளுக்கு பின்னர் கல்வியும் முக்கியமானது.

அதன் காரணமாகவும் உள்நாட்டு வேலை வாய்பில் தமிழர்களுக்கு இடம் வழங்கப்பட்டாலும், அதனை நிரப்பப் படிந்த இளைஞர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பது கண்டு அறியப்பட வேண்டிய விடயம். தற்போதைய பொருளாதார சூழலில், அத்தகைய வேலை வாய்ப்பு, சிங்களவர்களுக்கும் இல்லாமலே போய் விடும் என்பதே உண்மை நிலை.

புலம் பெயர்ந்தோரைப் பொறுத்த வரையில், அரசு தற்போது தளர்த்தியிருக்கும் பிடியை பிடிமானமாக பிடித்துக் கொண்டு, தங்கள் மக்களுக்கு ஏதாவது உருப்படியாக செய்ய முடியுமா, என்று யோசித்து செயல்பட வேண்டும். உதாரணத்திற்கு, தலைநகர் கொழும்பு உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் உள்ள பள்ளிகூடங்களில் மதிய உணவு திட்டத்தை செயல்படுத்த பொருளுதவி செய்யலாம். ஏன், தற்போது, தமிழ் நாட்டில் அமல்படுத்த துவங்கி இருக்கும் காலை உணவிற்கும் அவர்களே ஏற்பாடு செய்யலாம்.

அது போன்றே, தமிழர் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்து மற்றும் உபகரணங்களை அன்பளிப்பாக கொடுப்பதற்கு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தலாம். அல்லது, சமுதாய மருத்துவ கூடங்களை நிறுவி, புலம் பெயாந்த சிறப்பு மருத்துவர்கள் ஆண்டுக்கு, ஒன்று அல்லது இரண்டு முறைகள் வந்து சேவை செய்யலாம்.

## பொருளாதார அகதி

இங்குள்ள படித்த இளைஞர்களுக்கு மட்டுமாவது வேலைவாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் திட்டங்களை முன் வைக்கலாம். ஏன், தாங்கள் வாழும் நாடுகளில், தங்களுக்கு உடமையான தொழிற் கூடங்களில், ‘பொருளாதார அகதி’ என்ற முத்திரையுடன் அவர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு, அந்தந்த நாட்டு அரசுகளுடனும் முயற்சி செய்யலாம். அல்லது, அவர்கள் பணி செய்யும் கம்பியூட்டர் சார்ந்த நிறுவனங்களின் ‘பேக் ஆபீஸ்’ பணிகளை நாட்டில் வாழும் தமிழ் இளைஞர்களுக்கு பெற்று கொடுக்கலாம்.

புலம்பெயர்ந்தோர், தாங்கள் வாழும் நாடுகளில் எல்லாம், இந்து கோவில்கள் மற்றும் மத நிறுவனங்களை நிறுவி செயல்படுத்தி வருகின்றனர். இன்றும் அவற்றில் பலவற்றையும் தங்களது அரசியல் செயற்பாட்டிற்காக, நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படுத்தி வருகின்றனர். அதனை மாற்றி, உள்நாட்டு தமிழர்களுக்கு, அதிலும் குறிப்பாக ஆதரவற்ற வயோதிகர்களுக்கு என்று அனாதை இல்லம் போன்று பல்வேறு கிராமங்களிலும் நகரங்களிலும் துவங்கி, அவர்களுக்கு உணவும், உடையும் உறைவிடமும் வழங்கலாம்.

அது போன்றே, புலம்பெயர்ந்தோர் அமைப்புகளின் மூலம், உள்நாட்டில் வாழும், இனப்போரினால் அபலைகளாக்கப்பட்ட பெண்களுக்கு, எந்தவிதமான உதவி செய்யலாம் என்று திட்டமிட்டு செயல்படலாம். மேற்குலக நாடுகளில் மிகவும் விருப்பமாக வாங்கப்படும் எப்பிராய்டரி போன்ற பெண்கள் வீட்டிலிருந்தே செய்து முடிக்கும் கைவேலைகளுக்கு அவர்களை தயார் செய்யலாம். இதில் பல் வேறு மூன்றாம் உலக நாடுகளில், கிறிஸ்தவ மத நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றிலும் மேலாக, இவ்வாறான தங்களுடைய முன்னெடுப்புகளை, இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் தங்களது சிங்கள நண்பர்களையும் அழைத்துக் காட்டலாம். ஒன்று, அவர்களில் வசதி படைத்தோர், இத்தகைய திட்டங்களை, தென்னிலங்கை பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் வாய்ப்பு உள்ளது. அதைவிட முக்கியமாக, அரசியல் மற்றும் உரிமைகள் குறித்து மட்டுமே பேசும் புலம்பெயர் தமிழர்களுக்கு தங்களது மக்களை குறித்த கவலைகள் அத்துடன் நின்று விடவில்லை என்பதையும் புரிய வைக்கும்.

## செத்த பாம்பு

இவற்றிற்கு அப்பால் சென்று நோக்கினால், ஐ.நா. மனித உரிமை குழுவின் கூட்டத்தொடர், இனப்பிரச்சினைக்கு அப்பால் சென்று கன காலம் ஆகிவிட்டது என்பதைத் தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு திரும்பி வந்த 2019 ஆம் ஆண்டு துவங்கி, ஜெனிவாவின் முயற்சிகள் எல்லாம், அவர்களது ஆடசியை முடக்குவதற்கே மீண்டும் முன்னுரிமை காட்டியது. அதன் மூலம் தமிழர் தரப்பிற்கு நீதி கிடைத்தால் சரி, இல்லையென்றாலும் சரி, என்றுதான் அதன் முன்னெடுப்புகள் இருந்து வருகின்றன.

இன்று ராஜபக்ஷக்களின் ஆட்சி மட்டுமல்ல, அவர்களின் அரசியலே கூட பெரும்பாலும் இனி இல்லை என்று ஆகிவிட்ட பிறகும், சர்வதேசம் செத்த பாம்பை அடிப்பதிலேயே இன்னமும் வீரம் காட்டுகிறது. அடுத்த வாரம் துவங்க இருக்கும் ஜெனிவா கூட்டத்தொடருக்கான இலங்கை குறித்த விவாதப்பொருள் வெளியாகி உள்ளது. அதில், போர் குற்றங்கள் தவிர்த்து, நாட்டின் அண்மை காலப் பொருளாதார வீழ்ச்சி குறித்து எல்லாம் விவாதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இதில், எங்கே உள்ளது இனப்பிரச்சினை? இனப்பிரச்சினைக்கு அப்பாலான பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து பேசத் துவங்கினால், அதில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பங்களிப்பு முடிவானதாக இருந்தாலும், நாடு சுதந்திரம் கிடைத்ததில் இருந்து எந்தவொரு அரசும் அந்த குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பி விடமுடியாது. குறிப்பாக, நாட்டில் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் விவசாயம் மற்றும் கிராமப்புற துறைகளை இல்லாதாக்கிய பெருமை, தனக்கு முதல் நிறைவேற்று ஜனாதிபதி பட்டம் சூட்டிக்கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனவேயையே சாரும்.

## மதில் மேல் பூனை

சுருங்க கூறினால், ஜெனிவாவில் இலங்கையின் கழுத்தை சுற்றியுள்ள கயிற்றை இறுக்க மேற்குலக நாடுகள் முயற்சி செய்யும். அதனை தவிர்த்துக் கொள்ள அரசு முயலும். இங்குதான், அரசிற்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் உதவி தவிர்க்க முடியாத அவசியமாகி விடுகிறது.

ஜெனிவாவில் சீனாவிற்கு குறைந்த ஆதரவே இருந்தாலும், முக்கியமான ஐ.நா. பாதுகாப்பு சபையில், இந்த இரு நாடுகளுக்கும் வீட்டோ ஓட்டு உள்ளது. எனவே, ஜெனிவாவின் முடிவு எதுவாக இருந்தாலும், முடிந்த முடிவாக இலங்கை விவகாரம் பாதுகாப்பு சபைக்கு செல்லும் போது, அங்கு மேற்குலகின் பாச்சா பலிக்காது என்றே சொல்ல வேண்டும்.

இது தவிரவும், மனித உரிமை குழுவினுள்ளும் மூன்றாம் உறுப்பு நாடுகளின் இடையேயும் தற்போது, இலங்கைக்கான அனுதாபம் கூடி வருவதாகவே கருத வேண்டும். இதுவே மாறி, இலங்கைக்கு ஆதரவு வாக்குகளாக மாறும் என்று கருதி விடமுடியாது. என்றாலும், கடந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இரு தரப்பிற்கும் ஆதரவில்லாதவர்களின் வாக்குகளின் எண்ணிக்கையை வைத்து நோக்கும் போது, பல நாடுகளும் மதில் மேல் பூனையாக இருப்பதையே விரும்புகின்றன.

இந்த நிலைமையில், உள்நாட்டில் வாழும் தமிழர் தலைமைகளும் சரி, அவர்களது புலம்பெயர்ந்த சகோதரர்களும் சரி, தங்கள் மக்களின் காதுகளில் பூ சுற்றும் வேலையை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். மாறாக, இனப்போர் அழிவில் இருந்து இன்னமும் வெளியே வரமுடியாத தங்கள் மக்களின் அன்றாட தேவைகளையாவது பூர்த்தி செய்யும் விதத்தில் செயல்பட வேண்டும். ஏதாவது உருப்படியான வேலைகளை அவர்கள் செய்ய வேண்டும்.

மற்றபடி, அரச தரப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று எல்லாம், கொழும்பில் இருந்தும் யாழ்பாணத்தில் இருந்தும் குரல் கொடுப்பதெல்லாம் வேலைக்கு ஆகாது. மாறாக, தலைநகர் கொழும்பில் அறகலயா போராட்டத்தில் பங்குபெற்றதன் மூலம், சுமந்திரனும் சாணக்கியனும் சிங்கள தரப்புகளுடன் அமைத்துக் கொண்டதாக கூறப்படும் இன ஒற்றுமையை தகர்ப்பதாகவே அது அமையும்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# மகத்துவம் மிக்க மஹாளய காலத்தில் பித்ருக்களுக்காகப் பிரார்த்திப்போம்!

- தியாக. மயூரகிரி சிவாச்சார்யார் -



தக்ஷிணாயண காலத்தில் புண்ணியம் நிறைந்த புரட்டாசி மாதத்தில் வரும் மஹாளய பக்ஷம் எனம் புனித காலம் ஆவணி பௌர்ணமிக்கு மறுநாள் தொடங்குகிறது.

அன்று தொடங்கி அடுத்த பதினைந்து நாட்களும் மறைந்த முன்னோர்கள் நம் வீடு தேடி வருவார்கள் என்பது நம்பிக்கை.

**காருண்ய பித்ருக்கள்**

மறந்தவனுக்கு மாஹாளயத்தில் கொடு என்ற பேச்சுவழக்கினைக் கேட்டிருப்போம்.

இறந்துபோன நம் நேரடி முன்னோர்கள் மட்டுமல்லாது, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமன், மாமி, சகோதரன், சகோதரி, ஆசிரியர், சிஷ்யன், நம் மீது அக்கறை கொண்டு உதவியவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், குருமார்கள், என்றுநாம்அறிந்தவர்களில் இறந்து போன எல்லோரையும் திரும்ப நினைவிற்குக்கொண்டு வந்து அவர்களுக்கும் எள்ளுடன் கலந்த தண்ணீரை வார்த்து தர்ப்பணம் செய்யும் காலம் இதுவாகும்.

அவ்வாறு செய்வது அனைத்து ஆன்மாக்களையும் மகிழ்ச்சி அடையச் செய்கிறது. எனவே அத்தனை பித்ருக்களும் ஆசி வழங்குவது இந்த மகாளயபட்சக் நாள்களில் தான். இவர்கள் காருண்ய பித்ருக்கள் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

**மஹாளய பக்ஷம்**

மஹாளயம் என்றால் கூட்டமாக வருதல். மறைந்த நம் முன்னோர் மொத்தமாக கூடும் நேரமே மஹாளய பக்ஷம்.

'பக்ஷம்' என்றால் 15 நாள்கள். மறைந்த முன்னோர் 15 நாள்கள் (சில சமயங்களில் 14 அல்லது 16 ஆக மாறுபடும்) நம்மோடு தங்கும் காலமே மகாளய பக்ஷம். இது புரட்டாசி அல்லது ஆவணி மாத பௌர்ணமிக்கு மறுநாள் (சாந்திரமான பாத்திரபதம்), பிரதமை திதியில் துவங்கி, அமாவாசை வரை நீடிக்கும்.

புரட்டாசியில் வரும் அந்த அமாவாசையே மஹாளய அமாவாசை எனப்படும். தை அமாவாசை, ஆடி அமாவாசை ஆகியவற்றை விட உயர்ந்தது இது. மற்ற மாதங்களில் அமாவாசையன்று முன்னோரை நினைத்து தர்ப்பணம் செய்வோம். அவர்கள் மறைந்த தமிழ் மாதத்தில் வரும் திதியில், சிரார்த்தம் முதலியன செய்வோம்.

ஆனால், மஹாளயபக்ஷ காலத்தில் பிரதமை துவங்கி அமாவாசை வரை தினமும் தர்ப்பணம் செய்வது சிறப்பு.

எனினும் அவ்வாறு செய்வது எல்லோராலும் இயலுமானதல்ல. எனவே, குறித்த மஹாளயத்தில் ஒரு நாளிலேனும் தர்ப்பணம் – சிராா்த்தம் செய்வது வழக்கில் உள்ளது.

இவ்வாறு ஒரே ஒரு திதியில் செய்யப்படும் சிரார்த்தம் 'சக்ருன் மஹாளயம்' என்று அழைக்கப்படுகின்றது.

**மஹாபரணி**

மஹாளய பக்ஷத்தில், பரணி நக்ஷத்திரம் அபரான்ன காலத்தில் வரும் போது செய்யப்படுவது மஹாபரணி சிரார்த்தம்.

முதலில் அபரான்ன காலம் என்றால் என்னவென்று பார்க்கலாம். ஒவ்வொரு நாளும் பித்ரு காரியத்திற்கென நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது (ராகு காலம், நல்ல நேரம் போல்). அதன்படி ஒதுக்கப்பட்ட நேரமே அபரான்ன காலம். சுமார் இரண்டு மணி நேரம் வரும் இது, ஒவ்வொரு நாளும் மதியம் ஒன்றரை மணியிலிருந்து மூன்றரை மணி வரை நீடிக்கும்.

இந்த அபரான்ன காலத்தில் பரணி நக்ஷத்திரம் வந்தால் அதுவே 'மஹாபரணி' தினம். இது பொதுவாக, மஹாளய பக்ஷத்தில் சதுர்த்தி திதி அல்லது பஞ்சமி திதியில் வரும். சில சமயம் திருதியை திதியிலும் வருவதுண்டு. ஆகவே, மஹாபரணி சிரார்த்தம் செய்ய எண்ணுவோர் திதி குறித்து கவலை கொள்ள வேண்டியதில்லை.

பரணி நக்ஷத்திரத்திற்கு ஏன் இத்தனை சிறப்பு என்றால், இது பித்ருக்களின் அதிகாரியாகிய யமதர்மரால் ஆளப்படுவது. அதனாலேயே பித்ருபக்ஷத்தில் இது சிறப்புப் பெறுகிறது.

மஹாபரணி சிரார்த்தம், கயாசிரார்த்தத்திற்கு ஈடானது. மிகுந்த புண்ணிய பலன்களைத் தர வல்லது.

இது போலவே, மஹா அஷ்டமி போன்றவையும் சிறப்பானதாகும்.

**இது பித்ருக்களின் ஆசி பெறும் காலம்**

நம்மோடு வாழ்ந்து அமரத்துவம் எய்திய நம் வம்ச பித்ருக்கள் மட்டுமன்றி உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், இன்னும் செல்லப்பிராணிகள் கூட நற்கதி அடைய பிரார்த்திக்கும் உத்தம காலம்..

நம் நாட்டில் யுத்தம் மற்றும் தொற்று நோயால் நம் அன்புக்குரிய பலரை இழந்திருக்கிறோம். எல்லோரும் சத்கதியான சிவ கதி பெறப் பிரார்த்திப்போம்.

இது முன்னோர்கள் நம்மை ஆசீர்வதிக்கும் காலம்.


# பதிகமும் பொழிப்பும்

பாடல் - 11

**நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்**
**சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நலத்தால்**
**நாடவல்ல பனுவன்மாலை ஞானசம் பந்தன்சொன்ன**
**பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே.**

**பொருள் :-**

நீண்டு வளர்ந்து கொண்டே இருக்கும் சடையை உடைய பெருமானே, திருநெடுங்களத்தில் ஒப்பிலா நாயகியோடு வீற்றிருந்து அருள்பாலிப்பவனே, பல்துறை அறிஞர் பெருமக்கள் வாழும், சீர்காழியாகிய சீரபுரம் எனும் ஊரின் அரசன் போன்ற தலைவனாகிய ஞான சம்பந்தனாகிய நான், மக்களின் நலம் நாடி அவர்கள் இடர் களற்று, இன்பமே பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்ந்து பெருங்கடவுளாகிய உன்னோடு ஒன்றிச் சேர வேண்டும் என்ற பேராவலில் உன் பெயரால் என்மேல் ஆணையிட்டுப் பாடிய இந்தப் பாமாலையான பத்துப் பாடல் களையும் பாடிப்பரவும் மெய்யடியார்களின் பாவங்கள் தவிடுபொடியாகுமே. இது சத்தியம் இறைவனே, தலைவனே, அப்பனே, அருளமுதே....!



ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்
(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து....)

# நேரம் பொன்னானது சரியாகப் பயன்படுத்துவோம்!




அன்பான பிள்ளைகளே!

எல்லோருடைய வாழ்விலும் நேரத்தைக் கடைப்பிடித்து வாழப் பழகுவது மிக முக்கியமானது. ஒரு சிறிய கதையோடு விடயத்திற்கு வருகிறேன்.

காட்டிலே சிங்கராஜா எல்லா மிருகங்களுக்கும் வால் கொடுக்கப்போவதாக அறிவித்தார். அறிவித்தலைக் கேட்டு எல்லா மிருகங்களும் ஓடிப்போய் தங்களுக்கான வால்களைப் பெற்றுக்கொண்டன. குதிரை, நரி என முதலில் சென்ற மிருகங்களுக்கு அழகான வால்கள் கிடைத்தன. இப்படி ஒவ்வொரு மிருகங்களும் தமக்கான வால்களைச் சிங்கராஜாவிடமிருந்து பெற்றுக் கொண்டன. ஆனால் நீர் யானை சோம்பேறித்தனமாக இருந்து பிந்திப் போனதால் எஞ்சியிருந்த வாலையே பெற்றுக் கொண்டு இன்று வரை பூச்சிக் கடிகளிலிருந்து தப்பிக் கொள்ள வாலின் நீளம் காணாமல் தண்ணீருக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறது.

பார்த்தீர்களா பிள்ளைகளே! நேரத்தின் பெறுமதி தெரியாமல் சோம்பேறித்த னமாக இருந்தமைக்கு அதற்குக் கிடைத்த பரிசை!

எனவேதான் நீங்கள் எதைச் செய்வதாக இருந்தாலும், எங்கு செல்வதாக இருந்தாலும் அதனைத் திட்டமிட்டுச் செய்யவேண்டும். அதற்கு நேரத்தைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது.

உரிய நேரத்திற்கு நீங்கள் செய்யாமற் போகின்ற காரியம் உங்களுக்கு மட்டுமல்ல, உங்களைச் சார்ந்தவர்களுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும். ஒரு பாடசாலை பஸ்ஸின் சாரதியின் தாமதம் அத்தனை பிள்ளைகளையும் பாதிக்கும். ஓர் ஆசிரியரின் தாமதம் பிள்ளைகளைப் பாதிக்கும். ஒரு வைத்தியரின் தாமதம் சில வேளை நோயாளியின் உயிரையும் பறிக்கலாம்.

நாம் வாழுகின்ற வாழ்க்கை ஏதோ ஒரு விதத்தில் இன்னொருவரைச் சார்ந்தே இயங்குகிறது. எங்களின் தாமதமும் சோம்பேறித்தனமும் அடுத்தவர்களுக்குப் பாதிப்புத் தராமல் நேரத்தைக் கடைப்பிடித்து வாழப் பழகுவோம்.

– குணரட்ணம் சுதாகரன் –
(அபிவிருத்தி உத்தியோகத்தர்,
இந்து சமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம், நாவலர் மணி
மண்டபம், நல்லூர்)

# பொருளாதார ரீதியில் நலிவடைந்த தமிழர்பிரதேச மாணவர்களுக்கு யாழ். இந்துவில் கற்க வாய்ப்பு!

யாழ்ப்பாணம், செப். 09

பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் தமது கல்வி நடவடிக்கைகளை விஞ்ஞானப் பிரிவில் தொடர விரும்பி வாய்ப்புகள் கிடைக்கப் பெறாத வன்னிப் பிரதேசம், கிழக்கு மாகாணம், மலையகம் போன்ற தமிழர் தாயக பகுதிகளில் வசிக்கும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக, 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தர விஞ்ஞானப் பிரிவுக்கு 30 மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர். இவ்வாறு உள்வாங்கப்படவுள்ள மாணவர்களுக்கு கற்றல் நேரத்துக்கு மேலதிகமாகக் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஆசிரியர்கள் தயாராக இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் களுக்கான இலவச விடுதி வசதியும் ஏற்படுத் திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாணவர்களுக்கு தேவைப்படுமிடத்து மேலதிக பொருளாதார வசதிகளையும் கல்லூரிச் சமூகம் ஏற்படுத்திக் கொடுக்கும் என யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபரால் வெளியிடப்பட்டிருக்கின்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கல்விகற்க விரும்புகின்ற மாணவர்கள் principal@jhc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களுடைய விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிலக்கரிக் கொள்வனவு குறித்து விசாரணைகள் ஆரம்பமாகின்றன!

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



நிலக்கரி கொள்வனவு தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்க நிதி தொடர்பான குழு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர விடுத்த கோரிக்கைக்கு அமைய, இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிலக்கரி கொள்வனவு ஒப்பந்தம் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அரசாங்கத்தின் நிதிக்குழுவின் தலைவரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய இது தொடர்பான விசாரணைக்காக சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகத்துடன் நேற்றுறு (வியாழக்கிழமை) கலந்துரையாடப்பட்டதாகக் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிக்கும் வகையில் தொடர் வேலைத் திட்டங்களை தயாரிப்பதற்கு அரசாங்க நிதிக்குழுவில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதன் முதல் வேலைத்திட்டமாக, பணவீக்கத்துக்கும் வட்டி வீதத்துக்கும் இடையிலான தொடர்பு தொடர்பாக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பும் அவசியமானது என ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# கோதுமை மாவுக்கான தட்டுப்பாடுகள் 15 ஆம் திகதிக்குப்பின் முடிவுக்கு வரும்!



நாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு பின்னர் கோதுமை மா தட்டுப்பாடு முடிவுக்கு வரும் என நம்புவதாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

துருக்கியில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதாக அவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 450 ரூபாவாக அதிகரித்தால், 450 கிராம் பாண் ஒன்றின் விலை 350 ரூபாவாக அதிகரிக்கப்படுமென உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலைமையைத் தடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் நுகர்வோர்கள் மட்டுமன்றி தாங்களும் கடும் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோதுமை மாவின் விலை உயர்வு காரணமாக நாடளாவிய ரீதியில் பல்வேறு விலைகளில் ரொட்டி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இந்த சூழ்நிலையில் ரொட்டியை உட்கொள்வதை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்று நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

# லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்க முடியாதநிலை!

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு சத்தான உணவை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக நன்கொடையாளர்களிடம் உதவி கோரப்படுவதாக வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் சந்துஷ் சேனாபதி தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் உணவில் இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை போதுமான அளவு சேர்ப்பதில் தற்போது குறைபாடு ஏற்பட்டுள்ளதாகவும், முட்டைக்குப் பதிலாக உலர் பழங்கள் வழங்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவுப் பொருள்களின் விலையேற்றத்துடன் விநியோகஸ்தர்கள் விநியோகத்தை குறைத்துள்ளதாலும், நன்கொடையாளர்களிடம் இருந்து பெறப்படும் உதவிகள் குறைந்து வருவதாலும் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் மீண்டும் நன்கொடையாளர்களின் உதவி தேவைப்படுவதாகவும், அதனால் பங்களிக்க கூடியவர்கள் இருப்பின் வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்ய அவசர கொள்முதல் முறையின் ஊடாக தீர்மானம்

தற்போது பற்றாக்குறையாக உள்ள 50 அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்களை அவசரமாக கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அவற்றில் எக்ஸ்ரே படங்களும் உள்ளடங்குகின்றன என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

அவசர கொள்முதல் முறையின் ஊடாக அத்தியாவசிய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது 110 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகள் அரசு வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவின் பங்களிப்பு இல்லாமல் கடன் மறுசீரமைப்பு செய்யமுடியாது

## ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியீடு

சீனாவின் பங்களிப்பு இல்லாமல் நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை கடினமாக இருக்கும் என்று ஜப்பானிய அரசாங்க அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 200 கோடியே 90 லட்சம் டொலர்களைப் பெறுவதற்கு இலங்கைக்கு சவாலாக இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது.

ராய்ட்டர்ஸ் வெளியிட்ட தகவலின்படி, உலக நிதி மேலாளர்களால் இந்த நாட்டில் உள்ள சர்வதேச பத்திரங்களின் அளவு 2000 கோடி டொலர்களுக்கு அருகில் உள்ளது.

இந்த நாட்டில் வெளிநாட்டுக் கடன் தொகை 850 முதல் 1000 கோடி அமெரிக்க டொலர்கள் வரை இருக்கலாம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிளைபோசேட் களைக்கொல்லி தடைநீக்கம்: வர்த்தமானியை இரத்துச்செய்யக்கோரி மனு!

## உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

கிளைபோசேட் களைக்கொல்லிகளுக்கு தடைவிதித்து விதிக்கப்பட்ட உத்தரவை நீக்கும் வர்த்தமானியை இரத்து செய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விவசாய அமைச்சர், சுகாதார அமைச்சர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நுகர்வோர் சேவை அதிகார சபை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கிளைபோசேட் என்ற களைக்கொல்லியை தடை செய்து 2017 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளைபோசேட் பாவனையால் நீர் ஆதாரங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படுவதாகவும் மண் மற்றும் தாவரங்களுக்கு பெரும் கேடு ஏற்படுவதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் மனித ஆரோக்கியமும் பாரியளவில் பாதிக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், களைக்கொல்லி பாவனையால் மீன் மற்றும் பறவைகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக கிளைபோசேட் மீதான தடையை நீக்கியதன் மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனவும், தடையை நீக்கும் உத்தரவை செல்லாது என உத்தரவிட வேண்டும் எனவும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## நிவாரணம் வழங்குவதில் ஒழுங்கில்லை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகள் மூலமாக சர்வதேச சமூகம் வழங்க வேண்டும். அவை கண்காணிக்கப்பட வேண்டும். நிவாரணம் பெறுகின்றவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி முன்வைத்த இடைக்கால பாதீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறை சாத்தியம் அற்றவை. கணிசமான யோசனைகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை. துண்டு விழும் தொகையை ஒருபோதும் நிதியமைச்சர் ஜனாதிபதியால் சரி செய்ய முடியாது. ஏற்கனவே அரச கஜானா காலி. ஆகவே எங்கே இருந்து நிதி வரப்போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இதனால்தான் நான் வரவு - செலவு திட்ட விவாதத்தில் உரையாற்றிய போது, எனது அக்கறை, அவதானம் ஆகியன ஆக, பின்தங்கிய நிர்க்கதியான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் மாத்திரம் இருக்கிறது எனக் கூறினேன். அதிலும், பின்தங்கிய மக்கள் யார் என்பதை அறிவதில் அதிக கண்காணிப்பு வேண்டும் எனக் கூறினேன்.

ஏற்கனவே, சமுர்த்தி மற்றும் பின்தங்கியோர் பட்டியலில் இருக்கின்ற பெயர்கள் தொடர்பில் எனக்கு திருப்தி இல்லை. அங்கே நிவாரணம் பெற தகைமையற்ற வசதியானோர் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அதேபோல் அங்கே நிவாரணம் பெற வேண்டிய நிர்க்கதியான மக்களின் பெயர்கள் இடம்பெறவில்லை. இதை நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

இதற்கு காரணம் அரசியல்வாதிகள் தங்கள் ஆதரவாளர் பெயர்களை அங்கே திணித்துள்ளார்கள். எனது தொகுதி கொழும்பில் வாழும் ஹர்பன் புவர் என்ற நகர பாமரர்களின் பெயர்கள் முறையாக அங்கே இல்லை. குறிப்பாக சொந்த வீட்டில் வாழவில்லை என்ற காரணத்தால் பலரது பெயர்கள் இடம்பெறவில்லை. இது எப்படி? சொந்த வீடு இல்லாத வாடகை வீட்டில் வசிக்கும் ஏழைகள் மண்ணை சாப்பிட்டு, தண்ணீர் குடிக்க வேண்டுமா? அடையாள அட்டையை பார்த்து கஷ்டப்படும் எல்லோருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

அரசியல் காரணமாகவும், தமிழர்கள் என்ற காரணத்தாலும், பாரபட்சமாக நமது மக்கள் நடத்தபடுவதை நான் இலங்கைக்கு உதவும் உலக சமூகத்துக்கு சொல்லி வருகிறேன். இன்னமும் சொல்வேன்.

அடுத்தது, பெருந்தோட்டங்களில் வாழும் பாமர மக்கள். உழைக்கும் மக்கள். இன்று கோதுமை, பாண், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலையேற்றத்தால் விழி பிதுங்கி போயிருக்கும் பிரிவினர். நாட்சம்பள தொகையை 25 ஆல் பெருக்கி மாதம் இவ்வளவு சம்பளம் எனக்கூறி அவர்களை சமுர்த்தி மற்றும் பின்தங்கியோர் பட்டியலில், பிரதேச செயலக, கிராம சேவகர் மட்ட அரசாங்க அதிகாரிகள் சேர்ப்பதில்லை. இந்த மாத சம்பளம், காகிதத்தில் மட்டுமே இருக்கிறது. தேவையான அளவு நாட்கள் வேலை எல்லோருக்கும் கிடைப்பதில்லை. மாத சம்பளமும் கிடைப்பதில்லை.

இங்கேயும் தமிழர் என்ற இனவாத நோக்கில், பாரபட்சமாக நமது மக்கள் நடத்தப்படுகிறார்கள் என நான் நினைக்கிறேன். தமிழகத்தில் இருந்து வந்த பொருள்களை இலங்கையில் துன்பத்தில் வாழும் எல்லா மக்களுக்கும் கொடுங்கள் என நான்தான் முதன் முதலில் சொன்னேன். நாடாளுமன்றத்திலும் சொன்னேன். அதையிட்டு தமிழக முதல்வரும் மகிழ்ச்சி தெரிவித்து இருந்தார்.

ஆனால், அரசாங்கம் கடைசிக்கட்டத்தில் தமிழகத்தில் இருந்து வந்த பெருந்தொகை பொருள்களை உணவு ஆணையாளரிடம் கொடுத்து விநியோகம் செய்தது. இதில் நமது மக்களின் பிரதிநிதிகள் தொடர்பு படவில்லை. ஆகவே இந்தப் பொருள்களை அரசு அதிகாரிகள் தனது சொந்த விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் விநியோகம் செய்தார்கள்.

இவற்றை நான் அறிந்து வைத்துள்ளேன். நம் நாட்டின் பின்தங்கிய மக்களுக்கு என உலகம் தரும் நன்கொடைகள் எல்லோருக்கும் பாரபட்சமின்றி கிடைக்க வேண்டும் என்பது எனது குரல். அது யாருக்கு கேட்க வேண்டுமோ அவர்களுக்கு கேட்கும்படி நான் செய்வேன். - என்றார்.

## இலங்கைக்குள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களை நாங்கள் ஆளக்கூடிய ஒரு கௌரவமான தீர்வு கிடைக்காது

என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

போர்க் குற்றங்களுக்காக சர்வதேச நீதியைக் கோரி ஈழத்தமிழினம் போராடி வருகிறது. முள்ளிவாய்க்காலில் யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஜெனிவாவில் எங்கள் பிரச்சினை இருந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் தரப்புகள் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். பிரதான மூன்று அணிகளும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை உட்பட்ட குற்றங்களுக்காக ஈடு செய் நீதியைப்

பெறக்கூடிய விதத்திலும், இனப் படுகொலை மீண்டும் இடம்பெறாமல் இருக்க மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் அடிப்படையிலும், ஐ.நா. சபையின் கண்காணிப்பில் வடக்கு,கிழக்கு மாநிலத்தில் பொதுசன வாக்கெடுப்பை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தைக் கோருகின்றோம்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தொடர்ச்சியாக இந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டாலும் பொதுசன வாக்கெடுப்பை கோருவதைத் தவிர்த்து வருகிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்த வரை பொதுவெளியில் இந்த கோரிக்கையை முன் வைக்கவில்லை. ரெலோ, புளொட் ஆகியன எங்களுடன் இணைந்து இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தாலும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கவில்லை.

இலங்கைக்குள் ஒரு போதும் அரசியல் தீர்வு கிடையாது. அரசியல் யாப்பை உருவாக்கப் போவதாக கூறினாலும் அது ஒற்றையாட்சியைச் சுற்றிச் சுற்றித் தான் இருக்குமே ஒழிய, எங்களை நாங்களே ஆளக்கூடிய ஒரு கௌரவமான தீர்வு கிடைக்காது. ஈழத்தில் இருக்கக்கூடிய தமிழ் தரப்புகள் பொது உடன்பாட்டுக்கு வந்து பொதுசன வாக்கெடுப்பை முன்வைப்பதன் ஊடாகவே அடுத்த கட்டத்தை நோக்கி நாம் நகர முடியும். புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களும் தொப்புள் கொடி உறவுகளான தாய் தமிழக மக்களும் இதனை நோக்கி நகர வேண்டும்.

சுதந்திர தமிழீழம் வேண்டுமா இல்லையா என்ற சந்தர்ப்பம் புலம்பெயர் மக்களும் கலந்து கொள்ளக்கூடிய வகையில் வாக்களிப்பிற்கு விடப்படவேண்டும்.

இதனை மக்கள் இயக்கமாக வலியுறுத்தி மாவட்டம் மாவட்டமாக பேரணியாகச் செல்லக்கூடிய விதத்தில் செய்து முடிக்க வேண்டும். கட்சி பேதங்களை கடந்து அனைவரும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இந்தியாவில் தங்கி இருந்து பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

குவாட் அமைப்பில் உள்ள அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள்

சீன நடவடிக்கையை எதிர்த்து, ஈழத் தமிழர்கள் பிரச்சினையை முதன்மைப் படுத்திச் செயல்பட வேண்டும் - என்றார்.

## மகாராணி எலிசபெத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1952இல் அரியணைக்கு வந்த ராணி, மிகப்பெரிய சமூக மாற்றத்தைத் தன் வாழ்நாளில் கண்டார்.

அவரது மரணத்துடன், முன்னாள் வேல்ஸ் இளவரசரான அவரது மூத்த மகன் சார்ல்ஸ், புதிய அரசராக இருந்து 14 காமன்வெல்த் நாடுகளுக்குத் தலைவராகவும் விளங்கி நாட்டைதுக்க காலத்தில் வழிநடத்துவார்.

பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இன்று பிற்பகல் பால்மோரலில் ராணி அமைதியாக மறைந்தார். அரசர் மற்றும் அவரது துணைவியான அரசி இன்று மாலை பால்மோரலில் தங்குவார்கள். நாளை அவர்கள் லண்டனுக்குத் திரும்புவார்கள், என்று கூறப்பட்டுள்ளது.

ராணியை மருத்துவக் கண்காணிப்பில் மருத்துவர்கள் வைத்த நிலையில், அவரது பிள்ளைகள் அனைவரும் அபெர்தீனுக்கு அருகே உள்ள பால்மோரோலுக்கு பயணம் மேற்கொண்டனர்.

ராணியின் பேரனான இளவரசர் வில்லியமும் அங்கு இருக்கிறார். அவரது சகோதரர் இளவரசர் ஹாரி அங்கு சென்று கொண்டிருக்கிறார்.

ராணி எலிசபெத் ஞூஞூ அரச தலைவராக இருந்த காலம் போருக்குப் பிந்தைய சிக்கன நடவடிக்கையின்போது நடந்தது. பேரரசில் இருந்து காமன்வெல்த் ஆக நாடு மாற்றம் அடைந்தது, பனிப்போரின் நிறைவுக்காலம், ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்தது மற்றும் வெளியேறிய காலம் அதில் அடங்கியது.

ராணியின் ஆளுகை, 1874இல் பிறந்த வின்ஸ்டன் சர்ச்சில் தொடங்கி 101 ஆண்டுகளுக்குப் பிறகு 1975இல் பிறந்த லிஸ் டிரஸை இந்த வாரத்தில் புதிய பிரதமராக நியமிக்கும்வரை 15 பிரதமர்களைக் கண்டது.

தமது ஆட்சிக்காலம் முழுவதும் தமது பிரதமருடன் வாராந்திர சந்திப்புகளை அவர் நடத்தி வந்தார்.

லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில், ராணியின் உடல் நிலை குறித்த அறிவிப்புகளுக்காகக் காத்திருந்த மக்கள், அவரது மரணத்தைக் கேள்விப்பட்டதும் அழத் தொடங்கினர். அரண்மனையின் உச்சியில் இருந்த யூனியன் கொடி பிரிட்டன் உள்ளூர் நேரப்படி மாலை 6.30 மணிக்கு அரைக்கம்பத்தில் இறக்கப்பட்டது.

ராணி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி விண்ட்சர், லண்டனில் உள்ள மேஃபேரில் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி பிறந்தார்.

## காங்கேசனில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் ஊர்திப் பவனி மாவட்டங்கள் தோறும் செல்லும். அந்தந்த மாவட்டங்களில் பயங்கர வாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி கையெழுத்துப் பெறும் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒன்பது மாவட்டங்களிலும் உள்ள 25 மாவட்டங்களிலும் மாவட்டத்துக்கு ஒரு நாள் என்ற அடிப்படையில் நாளை முதல் 25 நாள்களுக்கு இந்த தொடர் போராட்டம் இடம்பெறும்.

## டிசெம்பர் வரையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கருத்து தெரிவித்த அவர் -

கடந்த வாரம் தினமும் ஒரு மணி நேரம் மின்வெட்டு இடம்பெறும் என்று அறிவித்திருந்த போதிலும் அந்த ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற்கொள்ளப்படவில்லை. 3!ஆம்திகதியில் இருந்து இன்றுவரை மின்வெட்டு இல்லை. அதற்கு காரணம் நம்மிடம் இருக்கும் மின்சாரத்தின் தேவை குறைந்துள்ளது. எனவே, மின்வெட்டுக்கு அவசியம் ஏற்படவில்லை. 5 ஆம் திகதி, வழங்கல் அதிகரித்துள்ளது. தேவையான அளவை விட அதிகளவில் உற்பத்தி செய்யும் திறன் எங்களிடம் தற்போது உள்ளது. எனவே, இந்த நிலக்கரி பிரச்சினை எதிர்வரும் இரண்டு மூன்று வாரங்களுக்கு வரவில்லை என்றால் ஒரு மணித்தியால மின்வெட்டும் மேற்கொள்ளப்படாது. தேவையான அளவு தண்ணீர் இருந்தால், நிலக்கரி இருந்தால், வரும் டிசெம்பர் மாதம் வரை மின்வெட்டுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்றார்.

## கொழும்பில் நேற்று ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் மற்றும் பலர் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் நாட்டில் அத்தியாவசிய தேவைகளின் விலை உயர்வு ஏற்பட்டுள்ளமைக்கும் அங்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான பிக்குகள் கலந்து கொண்டனர். தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கி பதாதைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பிக்கு மாணவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் ஒன்றையும் விடுத்தனர்.

குறிப்பாக பொலிஸாருக்கு அறிவிக்காமல் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் இதனால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர் எனப் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# செம்மணிப் படுகொலைகள் நினைவு மக்கள் முன்னணியால் அனுஷ்டிப்பு!




07.09.1996 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் கூட்டுப் பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருசாந்தி குமாரசாமி மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட அங்கு கொன்று புதைக்கப்பட்டவர்களினதும் 26 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்கொலைசெய்யப்பட்ட வர்களுக்கு தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சுவடி நிறுவக ஏற்பாட்டில் சிறுவர் சித்திர கண்காட்சி

சுவடி நிறுவகத்தின் ஏற்பாட்டில் சிறுவர் சித்திரக் கண்காட்சி செப்ரெம்பர் 09, 10 , 11 ஆகிய திகதிகளில் எழுதிரள், 209, பலாலி வீதி, கோண்டாவிலில் காலை 9 மாலை 5 மணிக்கிடையில் இடம்பெறும்.

இந்தச் சிறுவர் சித்திரக் கண்காட்சி சுவடி நிறுவகத்தால் முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணம் மாசற்ற மாநகரம் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாகும். நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட தரமான ஓவியங்கள் அனைத்தும் சிறுவர் சித்திரக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பான ஓவியங்களுக்குப் பரிசுகளும் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் சிறுவர் சித்திரக் கண்காட்சியில் வைத்துக் கையளிக்கப்படவுள்ளன.

## பஸில் விரைவில் அமெரிக்காவுக்கு கடும் அழுத்தங்களே காரணமாம்!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா செல்லவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இராஜாங்க அமைச்சர்கள் நேற்று (வியாழக்கிழமை) பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அது தாமதமாகலாம் எனக் கூறப்படுகிறது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராஜாங்க அமைச்சர்கள் பதவிகள் தொடர்பாக பின்வரிசை உறுப்பினர்கள் கட்சித் தலைமைக்கு அழுத்தம் பிரயோகித்து வருகின்றன எனவும் தகவல் வெளியாகியுள்ளன.

## மட்டக்களப்பு இலஞ்ச ஊழல் மோசடிகள் தொடர்பில் சந்திரகாந்தன் முறைப்பாடு

மட்டகளப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டு கொழும்பில் உள்ள இலஞ்சம் ஊழல் ஆணைக்குழுவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் காரணமாக நேரடியாக சென்று இந்த முறைப்பாடு செய்து இருக்கின்றோம்.

மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் கிடப்பில் இருக்கின்ற ஆவணங்களையும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துக்களையும் புலனாய்வு செய்வதற்காக ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலட்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்கு சட்டவிரோதமாக வந்த 1,500 கிலோ மஞ்சள் கைப்பற்றல்!

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மஞ்சளை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில், இறக்குமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்ட ஒரு தொகை மஞ்சள் கடத்தப்படுவது தொடர்பாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

36 பெரிய மூடைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1500 கிலோகிராம் மஞ்சளை இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இணைந்து கைப்பற்றியுள்ளனர். இதன் போது, பூநகரி வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட குறித்த மஞ்சள், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகநபரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக மீட்கப்பட்ட மஞ்சள் ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பெருள் கடத்தல் நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ளன என்கிறது பொலிஸ்

நாட்டில் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தில் விசேட திறமைகளை வெளிப்படுத்திய அதிகாரிகள் குழுவிற்கான பாராட்டு நிகழ்வில் கலந்துகொண்ட போதே சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொலிஸாருக்கு சாதாரண பிரஜைகளின் கடமைகளில் ஈடுபடுவதற்கான நேரம் குறைக்கப்பட்டமையே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

சமீபகாலமாக சாதாரண பொலிஸ் கடமைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது. குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. பிடியாணையை நிறைவேற்றும் வாய்ப்பை இழந்துள்ளோம். ரோந்து பணியை செய்ய நேரத்தை இழந்துள்ளோம். இதனால் குற்றச்செயல்கள் பெருகும். எனவே பொலிஸாரின் இயல்பான நடவடிக்கைகளை விரைவில் அமுல்படுத்த வேண்டும்.

மேலும் ஐஸ் போன்ற போதைப்பொருள்கள் சமூகத்தில் பரவலாகப் பரவிவருகிறது. சமீப நாள்களாக ரெய்டுகள் குறைந்துள்ளன. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஐஸ் போன்ற போதைப்பொருள்கள் பெருமளவில் பரவிவிட்டன.

பாடசாலை செல்லும் குழந்தைகள்கூட ஐஸ் பயன்படுத்துகின்றனர். போதைப்பொருளைப் பயன்படுத்துகின்றனர். அத்துடன் இந்நாட்டின் தொழிலாளர் சக்தியில் உள்ள இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் போதைப்பொருள் பாவனை செய்கின்றனர். கூடிய விரைவில் இந்த நிலையை மாற்ற வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மழையால் அதிகபட்ச கொள்ளளவை எட்டியது!

### நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, செப். 09

நாட்டில் தற்போது பெய்து வரும் கனமழையால் அனல்மின் நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் தற்போது அதிகபட்ச கொள்ளளவை எட்டியுள்ளது.

எவ்வாறாயினும் மின்சார உற்பத்தி மூலங்களை நிர்வகிப்பதற்காக மேலும் ஒரு மணிநேரம் மின்சாரம் தடைப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது மவுஸ்ஸாக்கலை மற்றும் காசல் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 90 வீதத்துக்கும் அதிகமாக உள்ளதுடன், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 92 வீதமாக அதிகரித்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 85 வீதமாக உயர்ந்துள்ளதுடன், போவதென்ன நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 73 வீதத்தை எட்டியுள்ளதாக அந்த் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகவில்லை எனவும் இதன் காரணமாக சிறு வெள்ளப்பெருக்கை ஏற்படுத்திய ஆறுகளின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.09.2022இல் வெளியிடப்பெற்றது.